[1987 மார்ச் 11

திருப்பெரும்புதூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

102—(*வினா எண் 8189)—திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து பூவிருந்தவல்லி தாலுக்காவை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பெரிய தாலுகாவாக இருக்கிறது. இதைவிடச் சிறிய தாலுக்காக்கள் எல்லாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அது மட்டுமின்றி பூவிருந்தவல்லியில் இன்றைக்கு ஜனத் தொகை கூடி இருக்கிறது. அங்கே 3, 4 பேரூராட்சிகள் உருவாகி இருக்கின்றன. அதையொட்டி சைதாப்பேட்டை தாலுக்காவில் இருக்கிற இரண்டு, மூன்று பிர்க்காக்களைச் சேர்த்து பிரித்தால் வசதியாக இருக்கும். எனவே பூவிருந்தவல்லி தாலுக்காவை உருவாக்குகின்ற வகையில் யோசனை செய்து உரிய திட்டத்தை அரசு வகுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்தூர் தாலுக்காவை இரண்டு வட்டமாகப் பிரிக்கிற அத்தகைய செயற்குறிப்பு இணை வருவாய் நிர்வாக ஆணையரிடத்தில் இல்லை என்றும், அரசினிடத்தில் நிலுவையாக இல்லை என்றும் இங்கே விடையாக நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே அதைப்பற்றிய நிலைமைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்வாகத்தினுடைய தன்மையை அறிந்து, சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் ஆய்ந்து, சிறப்பு நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைத்தால் அவர்களும் அரசுக்கு அதை அனுப்பி வைப்பார்கள். பிறகு அரசு அது பற்றி ஆராய்ந்து பார்த்து தக்க முடிவை எடுக்கும். ஆக அதுவரையிலும் அரசாக எந்த முடிவும் எடுக்க இயலாது. அங்கேயிருந்து அந்தக் கோரிக்கைகள் வர வேண்டும்.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக வசதி கருதி மாவட்டங்களைப் பிரிக்கிற போது அதில் உள்ளடங்கிய பெரிய வட்டங்களையும் பிரிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாவட்டங்களைப் பிரிக்கிறபோது புதிய கோட்டங்கள், புதிய வட்டங்கள் அமைக் கிற கருத்தையும் மனதில் கொண்டுதான் அதைப் பிரிக்கிற பணி யில் ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகளும், அலுவலாளர்களும் செயல் படுகிறார்கள்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா எந்தவிதமான வளர்ச்சி யும் பெறாமல் அங்கே தாலுக்கா அலுவலகம் மட்டும் இருக் கிறது. இப்படி இரண்டு மூன்று அரசுத் துறையினுடைய நிறு வனங்கள் மட்டும்தான் அங்கே இருக்கின்றனவே தவிர வேறு எந்தவிதமான வசதியும் இல்லை. எனவே அதனை நல்லதொரு சிறப்புக் குரிய தாலுக்காவாக உருவாக்குவதற்கு அரசு முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதனை சிறப்புக்குரியதாக ஆக்கு வதற்கு என்னென்ன வேண்டும், என்னென்ன வசதி, வாய்ப்புக் கள் வேண்டும் என்று கேட்பார்களேயானால், என்னென்ன இருக்கிறது, என்னென்ன முடியும், என்னென்ன இயலும் என்று நான் சொல்லலாம். பொதுப்படையாக சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் சிறப்பாக இருக்க வேண்டுமென்று நானும் வாழ்த்துகிறேன். *(சிரிப்பு)*

கன்னியாகுமரி மாவட்டத்தில் அன்னாசி பழம் பதனிடும் தொழிற்சாலை.

*103—(*வினா எண் 12343)*—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அன்னாசி பழம் பதனிடும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத் தில் கல்குளம், விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச்